1727



1727 1189

PANDIAN TAMIL VACHAKAM

BOOK II

28 MAR 1940
MADRAS

BY

M. RAJAMANIKKAM

AND

M. V. RAGHAVAN

The Educational Publishing Co.
Thyagarayanagar :: MADRAS
1939.

பாண்டியன் தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

ஆக்கியோர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.

தமிழாசிரியர், முத்யாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

வித்வான், ம வி. இராகவன்

தமிழாசிரியர், இராமகிருஷ்ண மிஷன் உயர்கலாசாலை, சென்னை.

11-48
494.8118

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

தியாகராயநகர் சென்னை

திப்புரிமை] 1939 [விலை அணா 4

KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

முகவுரை

பண்டு தொட்டே தமிழகத்தை ஆண்டுவந்த சேர சோழ பாண்டியருள்—தமிழைப் பேணி வளர்த்த பெருமை **பாண்டியர்க்கே உரியது.** ஆதலின், தமிழ் 'தென்றமிழ், மதுரைத் தமிழ், பாண்டித் தமிழ்' என்றெல்லாம் கூறப்படும். இப்பெற்றி நோக்கியே இத்தமிழ்ப்பாட வரிசை **பாண்டியன் தமிழ் வாசகம்** எனப் பெயர் பெற்றது.

இந்நூற்றொகுதி, கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள **புதிய பாட இயல்** (Syllabus)படி தயாரிக்கப்பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்** இதன்கண் சிறப்பிடம் பெற்றுள்ளது.

கிராம மாணவன் தன்னளவில் உலக விஷயங்களை அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல், ஆகிய தமிழ் அறிவினையும் பொது அறிவினையும் பெறச் செய்தலே இப்பாட இயலின் நன்னோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வரிசை தயாரிக்கப் பெற்றுளது.

பாட இயலிற் கண்டுள்ளவாறு புதிய சொற்களும் சொற்றொடர்களும் பாடந்தோறும் தரப் பெற்றுள்ளன. கதை–விஞ்ஞானம் – பயிர்த்தொழில் – கைத்தொழில் – சுகாதாரம் – சரித்திரம் – உரையாடல்–இலக்கியம்–நாடகம் முதலிய அறிவியற் பாடங்கள் ஒவ்வொரு நூலிலும் எழுதப்பட்டுள்ளன. பாட்டுகளில் வகுப்புக்கு ஏற்றவாறு கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், **கண்ணி**, பள்ளு, குறம் முதலிய பழம் பாடல்களும் புதிய பாடல்களும் அபிநயப் பாக்களும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. **மவுன வாசிப்பின்** அவசியம் படப் பயிற்சிகள் மூலமாகவும் கதைப் பாடங்கள் முதலியவை மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம் எழுதுதற்கும், கட்டுரை எழுதுதற்கும் தக்கவாறு சில பாடங்கள், மாதிரிக் கடிதங்கள் இன்ன பிறவும் தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், பாண்டியன் தமிழ் வாசக வரிசை—புதிய பாட இயற்படி நன்முறையில் அமைந்துள்ள **மாணவர் விருந்து** எனல் பொருந்தும். இந்நூல் வரிசை இத்தமிழகத்தே நல்வரவு கொள்ளும் எனும் துணிபுடையேம்.

மா. இராசமாணிக்கம்
ம. வி. இராகவன்

ஆசிரியர்க்கு

1. **குறிப்புப் புத்தகம்**—பத்திரிகைச் செய்திகளை ஒட்டி வைத்துக்கொள்ளும் **நோட்டுப் புத்தகம்**—இவற்றின் அவசியத்தை விளக்கி, இவற்றை வைத்துக்கொண்டு பயன்பெறப் பழக்குதல் வேண்டும்.

2. பல பொருள்களை நேரிற்காணச் செய்தலின் மூலமாகக் **கட்டுரை எழுதுதற்குரிய விஷய ஞானத்தைப்** பெருக்குதல் வேண்டும்,

3. மாணவரைப் பல இடங்கட்கு அழைத்துச் செல்லல் - அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்கல் - அவற்றைப் பற்றிக் கட்டுரை வரையச்செய்தல்—பத்திரிகைச் செய்திகளை அன்றாடம் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல் - இன்னபிறவும் மாணவர் முன்னேற்றத்துக்கு ஏற்றவையாம்.

4. பயிற்சிகளில் தரப்பெற்றுள்ள பலவகைச் செய்திகளைப் பற்றிய எல்லாத்துறைகளிலும் பிள்ளைகளைத் திறம்படப் பழக்குவித்தல் வேண்டும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளிடம் வேலை வாங்குதல் வேண்டும்.

5. தோட்டவேலை, சிறிய கைத்தொழில்கள் இவற்றைப் பிள்ளைகளே செய்யப் பழக்குதல் நலம். பிள்ளைகள் தாம் செய்வனவற்றையும் தம் அநுபவத்தையும் குறிப்புப் புத்தகத்தில் அன்றாடம் எழுதச் செய்தல் நலமாகும்.

6. பாடநூல்களில் வரும் சம்பாஷணைகளை நாடகமாக நடிக்கச் செய்தல் ; நாடக ரூபத்தில் எழுதச் செய்தல் ; நாடக ரூபத்தில் உள்ளவற்றைக் கதை ரூபமாக எழுதச் செய்தல் ; கதையில் கூறப்படும் ஆள்களாகத் தம்மை நினைந்து, சுயசரிதை கூறுதல் போலவும், கண்டார் கூறல் போலவும், கேட்டார் கூறல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் முதலியன மாணவர்க்குப் பேசுந் திறனையும் எழுதுந் திறனையும் பெருக்கும் வழிகள் ஆகும்.

7. கதைப்படங்களையும் பிற பயிற்சிகளில் வரும் படங்களையும் கண்டு சில வாக்கியங்கள் கோவையாகக் கூறப் பழக்கலும், எழுதப் பழக்கலும், கதையை முழுவதும் கூறவும் எழுதவும் பழக்கலும் பிள்ளைகட்குப் பெரும்பயன் அளிக்கும்.

8. இன்ன இன்ன இடங்களில் **க, ச, த, ப,** மிகும் என்பதைப் பிள்ளைகட்கு உதாரணத்துடன் அறிவித்து, அவ்வறிவைப் பாடங்கள் வாயிலாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் ஆசிரியரது தலையாய கடனாகும்.

9. **ர, ற ; ல, ள ; ந, ன, ண**—இவற்றின் பேதம் விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதல், தக்க இடங்களில் நிறுத்தக் குறிகளை அமைத்துப் பொருள் விளங்குமாறு படிக்கப் பழக்குதல், அங்ஙனமே பேசச் செய்தல் முதலியன பிள்ளைகளை மொழியறிவிற் கவலை கொள்ளச் செய்யும் நல்ல தொண்டாகும்.

10. செய்யுட்களில் சிலவற்றுக்கு நிறுத்தக் குறிகளை இட்டுள்ளோம்; சிலவற்றுக்கு இல்லை. தக்க இடங்களில் தக்க குறிகளை மாணவரைக் கொண்டு இடச்செய்தல் வேண்டும் என்பதற்கே அங்ஙனம் அவை குறியின்றி விடப்பட்டுள்ளன. செய்யுளைச் சீர்பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் அவசியமாகும்.

11. அபிநயப் பாடல்கள்முதலியவற்றை அபிநயத்தோடு எடுத்தல்—நலிதல் முதலிய ஸ்வர பேதங்கள் விளங்கக் கற்பித்துப் பாடச்செய்தல் சிறந்தது.

12. உடற்பயிற்சி, சுகாதாரம் முதலிய முக்கியமான செய்திகளின் அவசியத்தைப் படங்கள், கதைகள், காட்சிகள் இவற்றின் மூலம் நன்கு அறிவுறுத்தி, அவற்றில் போதிய கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் ஆசிரியர் பண்பாகும்.

படப் பயிற்சி—1

குறிப்பு :—படத்தைப் பார்த்து, ‘இது இன்னது’ என்று சொல்லவும் எழுதவும் செய்க.



படப் பயிற்சி—2

குறிப்பு :—படத்தைப் பார்த்து, ‘இது இன்னது’ என்று சொல்லவும் எழுதவும் செய்க.



படப் பயிற்சி—3

குறிப்பு :—படத்தைப் பார்த்து, 'இது இன்னது' என்று சொல்லவும் எழுதவும் செய்க.



படப் பயிற்சி—4

குறிப்பு :—படத்தைப் பார்த்து, ‘ இது இன்னது ’ என்று சொல்லவும் எழுதவும் செய்க.



பாடம் 1

நிறங்கள்

சொற்கள்: பச்சை—நிறம்—வெண்மை—வற்றல்—சிவப்பு—கருமை—ஆகாயம்—நீலம்.

1. கிளி பச்சை நிறம்.

2. பால் வெண்மை நிறம்.

3. மிளகாய் வற்றல் சிவப்பு நிறம்.

4. எலுமிச்சம்பழம் மஞ்சள் நிறம்.

5. காகம் கருமை நிறம்.

6. ஆகாயம் நீல நிறம்.

பாடம் 2

ருசி (சுவை)

இனிப்பு—உறைப்பு—பாகல்—கசப்பு—கடுக்காய்—துவர்ப்பு—புளிப்பு—உவர்ப்பு.

1. வெல்லம் இனிப்பு.
2. மிளகாய் உறைப்பு.
3. பாகற்காய் கசப்பு.
4. கடுக்காய் துவர்ப்பு.
5. எலுமிச்சம்பழம் புளிப்பு.
6. உப்பு உவர்ப்பு.

பயிற்சி

1. நீ பார்த்த புஷ்பங்களில் வெண்மையானவற்றைச் சொல்.
2. தித்திப்பு உள்ள பழங்களில் இரண்டு சொல்.
3. நிறமும் ருசியும் சொல்: வாழைப்பழம், எலுமிச்சம்பழம், இஞ்சி, பாக்கு, உப்பு.
4. உப்பு, வெல்லம், பாகற்காய், எலுமிச்சம்பழம்—ஒவ்வொன்றிலும் எத்தனை எழுத்துகள் இருக்கின்றன?

படப் பயிற்சி—5

ஆசிரியருக்கு:—சிவப்பு, மஞ்சள், வெண்மை—இச்சொற்களின் உதவிகொண்டு இவ்வட்டத்தில் உள்ள புஷ்பங்களின் நிறத்தைச் சொல்லவும் எழுதவும் செய்க.



பயிற்சி

1. உனக்குத் தெரிந்த வெண்மை நிறப் பூக்கள் எவை ?
2. உனக்குத் தெரிந்த மஞ்சள் நிறப் பூக்கள் எவை?
3. உனக்குத் தெரிந்த சிவப்பு நிறப் பூக்கள் எவை ?
4. முல்லை, மல்லிகை, ரோஜா, சாமந்தி—இவற்றுள் செடிப்பூக்கள் எவை ? கொடிப் பூக்கள் எவை ?

குறிப்பு:—இக்கேள்விகளைக் கேட்டுப் பிள்ளைகளிடமிருந்து பதிலை வரவழைக்கவும்.

பாடம் 3

இருக்கிறது

புற்றில்—செடியில்—குளத்தில்.

புற்றில் பாம்பு இருக்கிறது.
மரத்தில் கிளி இருக்கிறது.
செடியில் பூ இருக்கிறது.
குளத்தில் தண்ணீர் இருக்கிறது.

பயிற்சி

இருக்கிறார்கள்	இருக்கின்றன	இருக்கிறது

இம் மூன்றனுள் தக்கதைக் கோடிட்ட இடத்தில் அமைத்து எழுது :—

1. செம்பில் பால் ______.
2. வீட்டில் சாமான்கள் ______.
3. வீட்டில் பெற்றோர் ______.

பாடம் 4

அபிநயப் பாட்டு

நெல்லும் கம்பும் விளையுமே
நெல்லும் கம்பும் விளையுமே
உனக்கும் எனக்கும் தெரியுமே
உழவன் இப்படி விதைப்பானே
இப்படிச் சும்மா நிற்பானே
காலைத் தட்டிக் கைதட்டி
வயலைச் சுற்றிப் பார்ப்பானே
ட்ராலலாலலா—ட்ராலலாலலா—ட்ராலலாலலா.

பாடம் 5

உறுப்புகளும் வேலைகளும்

வணங்குகிறோம்—காண்கிறோம்—முகர்கிறோம்—செய்கிறோம்—பேசுகிறோம்—கேட்கிறோம்—நடக்கிறோம்—சுவைக்கிறோம்.

1. நாம் தலையால் வணங்குகிறோம்.
2. நாம் கண்களால் காண்கிறோம்.
3. நாம் காதுகளால் கேட்கிறோம்.
4. நாம் மூக்கினால் முகர்கிறோம்.
5. நாம் வாயினால் பேசுகிறோம்.
6. நாம் நாவினால் சுவைக்கிறோம்.
7. நாம் கைகளால் செய்கிறோம்.
8. நாம் கால்களால் நடக்கிறோம்.

பயிற்சி

(1) கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைக்க :

1. நாம் ——— வணங்குகிறோம்.
2. நாம் ——— முகர்கிறோம்.
3. நாம் ——— சுவைக்கிறோம்.
4. நாம் ——— மெல்லுகிறோம்.

(2) புற்றில் பாம்பு இருக்கிறது, நாம் வாயினால் பேசுகிறோம்—ஒவ்வொன்றிலும் இருக்கும் சொற்களை எண்ணிச் சொல்.

குறிப்பு :—ஒவ்வொன்றின் உபயோகத்தையும் சொல்லவும் எழுதவும் செய்க.

படப் பயிற்சி—6



பயிற்சி

1. படத்தில் உள்ள உறுப்புகளின் பெயர்களைச் சொல்.
2. ஒவ்வோர் உறுப்பின் வேலை என்ன? சொல்.
3. இதில் இல்லாத வேறு உறுப்புகள் எவை? சொல்.
4. அவற்றின் உபயோகம் என்ன? சொல்.

குறிப்பு:—இக்கேள்விகட்குத் தகுந்த பதிலை வரவழைக்கவும்

பாடம் 6

கட்டளை

சோறு—குதிரை—பையன்—உட்கார—ஏழை—பிச்சை—குழந்தை—உடுக்க—அணிய—நகை.

போடு

நாய்க்குச் சோறு போடு.

குதிரைக்குப் புல் போடு.

பையனுக்குச் சட்டை போடு.

உட்கார மணை போடு.



கொடு

ஏழைக்குப் பிச்சை கொடு.

குழந்தைக்குப் பால் கொடு.

உடுக்க ஆடை கொடு.

அணிய நகை கொடு.



மூடு

கதவை மூடு.

வாயை மூடு.

பெட்டியை மூடு.

புத்தகத்தை மூடு.

கட்டு

கையைக் கட்டு.

ஆடையைக் கட்டு.

மாட்டைக் கட்டு.

ஆட்டைக் கட்டு.

பயிற்சி

(1) இவற்றுள் தகுந்த சொற்களைக் கோடிட்ட இடங்களில் அமைக்க :

போடு	கொடு	மூடு	கட்டு

1. காசு எடுத்த பின் பெட்டியை ______.
2. பள்ளத்தில் கல்லைப் ______.
3. புத்தகத்தை எனக்குக் ______.
4. இடுப்பில் ஆடையைக் ______.

குறிப்பு:—கீழ்வரும் வார்த்தைகளை உபயோகித்துக் கேள்விகள் கேட்டு, ஒவ்வொரு வாக்கியத்தில் பதில் வரவழைக்கவும் : கொடுக்கிறான், கறக்கிறான், செய்கிறான், விடுகிறான்.

பாடம் 7

கிழமைகள்



இன்று—கிழமை—ஞாயிற்றுக் கிழமை—விடுமுறை—நாளை—திங்கள்—பாடசாலை—வாரம்—எத்தனை—நாட்கள்—செவ்வாய்—புதன்—வியாழன்—வெள்ளி—சனி—ஞாயிறு.

கந்தன் : இன்று என்ன கிழமை?

சுந்தரி : இன்று ஞாயிற்றுக்கிழமை. இன்று விடுமுறை நாள்.

கந்தன் : நாளை என்ன கிழமை?

சுந்தரி : நாளை திங்கள் கிழமை.

கந்தன் : ஆம். ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?

சுந்தரி : ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.

பயிற்சி

1. ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?
2. கிழமைகளைத் திங்கள் கிழமை முதல் வரிசையாகச் சொல்.
3. புதன் முதல் ஒரு வார நாட்களைச் சொல்.
4. எடு, பிடி, தொடு, எட்டு—ஆறும் பாடத்தில் இருப்பது போல ஒவ்வொன்றையும் அமைத்து 4 வாக்கியங்கள் சொல்லச் செய்க.

பாடம் 8

நிலா

வானம்—வட்ட வடிவம்—பூரணமாய்—பௌர்ணமி—பிரகாசிக்கும்—மின்னிமின்னி—அமாவாசை.

சீதை: அம்மா, இன்று பௌர்ணமி என்று அப்பா சொன்னரே, அது என்ன?



தாயார்: சந்திரன் பூரணமாகத் தோன்றும் தினத்திற்குப் பௌர்ணமி என்பது பெயர். அன்று சந்திரன் வட்டமாக இருக்கும்.

சீதை: சந்திரன் அவ்வாறு வட்ட வடிவமாக நாளை இராதோ?

தாயார்: இராது. நாள் செல்லச் செல்லச் சந்திரன் குறைந்து கொண்டே போகும்.

சீதை: அப்படியா! சந்திரன் இல்லாத நாளும் உண்டோ?

தாயார்: உண்டு. அந்த நாள் அமாவாசை எனப்படும். அன்று முதல் சந்திரன் மறுபடியும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வரும்.

சீதை: நாம் சந்திரனைப் பகலில் பார்க்க முடியுமா? நக்ஷத்திரங்கள் பகலில் எங்கே போகின்றன?

தாயார்: சூரியனுடைய வெளிச்சத்தினால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் பகலில் தெரிவதில்லை.

சீதை: ஓஹோ! அப்படியா! அம்மா, நான் இரவில் பல நக்ஷத்திரங்களைப் பார்த்திருக்கிறேன். சில நக்ஷத்திரங்கள் மின்னி மின்னிப் பிரகாசிப்பது உண்டு. அப்பொழுது ஆகாயம் மிக்க அழகாக இருக்கும்!

கேள்விகள்

1. நிலாவுக்கு உள்ள வேறு பெயர் யாது?
2. சந்திரனது வடிவம் என்ன?
3. சந்திரன் எப்பொழுது பிரகாசிக்கும்?
4. நாம் எக்காலங்களைப் பகல், இரவு என்று கூறுகிறோம்?

பயிற்சி

(1) கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைக்க:—

1. சந்திரன் தோன்றாத நாள்———.
2. நக்ஷத்திரங்கள் ——— ——— பிரகாசிக்கின்றன.
3. ———பிரகாசிக்கும் காலம் பகல்.

(2) முழு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—

வட்டவடிவம், மின்னிமின்னி, செல்லச்செல்ல, நாளுக்குநாள், பகல் இரவு.

(3) க்ஷ, ஹ—இப்பாடத்தில் இவை வந்துள்ள சொற்களைச் சொல். நீ அறிந்துள்ள இம் மாதிரியான வேறு சொற்களைச் சொல்.

பாடம் 9

எங்கள் பாட்டி

உனக்கும் எனக்கும் போட்டி—கதை
ஒன்று சொல்லடி பாட்டி !
தமுக்கு அடிப்பவன் தோட்டி-அவன்
தாங்கி வருவது ஈட்டி.

தங்கத்தாலே காப்பு—கையைத்
தலைக்கு மேலே கூப்பு.
எங்கள் கொய்யாத் தோப்பு—அதில்
இருக்கும் பழம் தித்திப்பு.





படப் பயிற்சி—7

குறிப்பு :—எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களைப் பார்த்துக் கீழே கண்ட வினாக்களுக்கு விடை கூறவும் எழுதவும் செய்க.

(1) பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ?

(2) பையன் என்ன செய்கிறான் ?

(3) வீடு எப்படி இருக்கின்றது ?

(4) இருவர் என்ன செய்கின்றனர் ?

(5) கொத்தன் என்ன செய்கிறான் ?

(6) பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ?

குறிப்பு :—(1) பிள்ளைகள் இக்கேள்விகட்குக் கூறும் விடைகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லச் செய்க.

(2) அவ்விடைகளையே ஒரு கதை ரூபமாகச் சொல்லவும் எழுதவும் செய்க.

பாடம் 10

எங்கள் குடும்பம்.

குடும்பம்—அறை—சமையல்—வெள்ளித் தட்டு—வெள்ளிப்பேலா—பன்னீர்ச் செம்பு—தந்தச் சீப்பு—கடிகாரம்—பஞ்சு மெத்தை—நிலைக் கண்ணாடி—தொட்டில்—சங்கிலி—முதலியன—உள்ளே—இரும்பு அடுப்பு—அரிவாள் மணை—பெரிய—சிறிய—மிகவும்—யார் யார்—தவிர—இவர்களே.

கமலம்: இது யார் வீடு?

சுந்தரி: இது எங்கள் வீடு.

கமலம்: உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

சுந்தரி: எங்கள் வீட்டில் என் தாயார், தகப்பனார், அண்ணன், தம்பி, பாட்டனார், பாட்டியார் இவர்கள் இருக்கிறார்கள்.

கமலம் : அவர்கள் இப்பொழுது எங்கே இருக்கிறார்கள் ?

சுந்தரி : என் பாட்டனார், தகப்பனார், அண்ணன், தம்பி இவர்கள் என் அறையில் இருக்கிறார்கள். பாட்டியாரும் தாயாரும் சமையல் அறையில் இருக்கிறார்கள்.

கமலம் : உன் வீட்டில் இருக்கும் சாமான்கள் எவை ?

சுந்தரி : என் வீட்டில் நாற்காலி, மேஜை, வெள்ளித் தட்டு, வெள்ளிப் பேலா, பன்னீர்ச் செம்பு, தந்தச் சிப்பு, கடிகாரம், பஞ்சு மெத்தை, நிலைக் கண்ணாடி, தொட்டில், சங்கிலி முதலியன இருக்கின்றன.

கமலம் : வா, நாம் சமையல் அறையைப் பார்ப்போம்.

சுந்தரி : சரி, உள்ளே வா. இது சமையல் அறை. இங்கே,

இரும்பு அடுப்பு, மண் குடம், அகப்பை, பால் செம்பு, அம்மி, உறி, அரிவாள் மணை முதலியவை இருக்கின்றன, பார்.

கமலம் : உங்கள் குடும்பம் பெரிய குடும்பமே.

சுந்தரி : உங்கள் குடும்பம் சிறிய குடும்பமா ?

கமலம் : ஆம். எங்கள் குடும்பம் மிகவும் சிறியதே.

சுந்தரி : உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிருர்கள் ?

கமலம் : எங்கள் வீட்டில் என்னைத் தவிர, என் தாயார், தகப்பனுர், தங்கை, சிறு குழந்தை இவர்களே இருக்கிருர்கள்.

சுந்தரி : அப்படியா ? உங்கள் குடும்பத்தை விட எங்கள் குடும்பம் மிகவும் பெரியதே.

கேள்விகள்

1. சமையல் அறையில் உள்ள பொருள்கள் எவை ?
2. சுந்தரியின் வீட்டில் உள்ள சாமான்கள் எவை ?

பயிற்சி

1. சாய்வு நாற்காலி, கடிகாரம், மண்குடம், அரிவாள் மணை இவை எங்கெங்கு இடங்களில் இருந்தன என்று சுந்தரி கூறினுள் ? அவ்விடங்களைச் சொல்.

வெள்ளி	பெரிய	இரும்பு

2. கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தைகளை அமைக்க :

(1) ——— பெட்டி.
(2) ——— பேலா.
(3) ——— தோட்டம்.
(4) இது ——— பாணை.
(5) இது ——— கூஜா.
(6) அது ——— கம்பி.

படப் பயிற்சி—8

குறிப்பு :—ஒவ்வொன்றின் உபயோகத்தையும் சொல்லவும் எழுதவும் செய்க



பயிற்சி

1. வீட்டில் உள்ள (படத்தில் இராத) வேறு சாமான்களின் பெயர்களைச் சொல்.

2. கூடை, சிப்பு, படம், அம்மி, சாய்வு நாற்காலி, துடைப்பம்—இவற்றின் உபயோகம் என்ன ?

3. அம்மி, சிப்பு, கூடை, நாற்காலி, துடைப்பம்—இவற்றை எங்கே வாங்கலாம் ?

குறிப்பு:—இவற்றிற்குப் பிள்ளைகளிடமிருந்து பதிலை வரவழைக்கவும்.

பாடம் 11

எங்கள் குடும்பம்—II

இராணி—கட்டளை—அப்படியே—பெற்றோர்—சொல்படி—நடப்பது—கடமை—அல்லவா — அழகாக — மல்லிகை — கீரைப்பாத்தி — ரோஜா — அவிழ்த்து விடுகிறான்—கழுவிக்கொண்டு—சுத்தமாக.

கமலம்: எங்கள் தகப்பனார் வீட்டிற்கு வேண்டும் சாமான்களை வாங்கி வருகிறார். எங்கள் தாயார் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு ஓர் இராணியைப் போல இருக்கிறார். நாங்கள் அவர் கட்டளைப்படியே நடக்கிறோம்.

சுந்தரி: நாங்களும் அப்படியே நடக்கிறோம். பெற்றோர் சொல்படி நடப்பதே பிள்ளைகளின் கடமை அல்லவா?

சுந்தரி: எங்கள் தோட்டத்தைப் பார்.

கமலம்: இத் தோட்டம் மிகவும் அழகாக இருக்கிறது. இதில் மல்லிகை, ரோஜா முதலிய பூஞ்செடிகளும், கிரைப் பாத்தியும் இருக்கின்றன. அங்கு வருகிறவன் யார்?

சுந்தரி: அவன் தான் இராமன். அவன் பால் கறக்க வருகிறான். அவன் கன்றை அவிழ்த்து விடுகிறான். அவன் பால் செம்பை எடுத்துக்கொண்டு வருகிறான், பார்.

கமலம்: அவன் ஏன் கைகளைக் கழுவிக்கொண்டு வருகிறான்?

சுந்தரி: அவன் பால் கறக்கப் போவதால், கைகளைச் சுத்தமாகக் கழுவிக்கொண்டு வருகிறான்.

கேள்விகள்

1. ஒரு குடும்பத்தின் தலைவர் யார்?
2. கமலத்தின் பெற்றோர் என்ன செய்கிறார்கள்?
3. சுந்தரியின் தோட்டத்தில் என்னென்ன இருக்கின்றன?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைக்க:—

1. பெற்றோர் ——— நடப்பதே ——— கடமை.
2. இத்தோட்டம் ——— அழகாக ———.
3. நாங்கள் ——— கட்டளைப்படியே ———.

II. சுத்தமாக, கடமை, சாமான்களை — இவற்றைத் தக்க இடங்களில் அமைக்க:—

1. இராமன் கைகளைச் ——— க் கழுவுகிறான்.
2. தகப்பனார் ——— வாங்குகிறார்.
3. பெற்றோர் சொற்படி நடப்பது பிள்ளைகளின் ———.

III. ஜா—இப்பாடத்தில் இவ்வெழுத்து வந்துள்ள சொற்களை எழுது. நீ அறிந்துள்ள இம்மாதிரியான வேறு சொற்களைச் சொல்.



பாடம் 12

குடும்பம்

1. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை.
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

2. ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

—பாரதியார்



பாடம் 13

தொழிலாளிகள்

உழுகிறான்—குடியானவன்—பாய்ச்சி—சேற்றில்—மனைவி—நாற்று—நடுவார்கள்—தானியங்களை—தருபவர்கள்—கலப்பை—வாச்சி—இழைப்புளி—உபயோகிக்கும் — ஆயுதங்கள் — உலைக்களம் — காய்ச்சின — பட்டறை—சம்மட்டி—கொழு—கோடரி—தாழி—அகல் — திருகுசக்கரம்—சுழற்றுதடி — தட்டுப் பலகை—தப்புகிறான்—அழுக்கு—நாள்தோறும்—உருக்கி.

இந்தப் படத்தைப் பார்: ஒருவன் ஏர் உழுகிறான். இவன் ஒரு குடியானவன். இவன் தன் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சி, நிலத்தை உழுகிறான். பிறகு இவன் சகோதரியும் மனைவியும் நாற்று நடுவார்கள். இவர்களே நமக்குத் தானியங்களைத் தருபவர்கள்.





இப்படத்தில் இருப்பவன் தச்சன். இவன் கலப்பை முதலிய சாமான்கள் செய்வான். மேஜை, நாற்காலி, பெஞ்சு, பெட்டி முதலியவை செய்து கொடுப்பவனும் இவனே. வாச்சி, உளி, வாள், இழைப்புளி முதலியவை இவன் உபயோகிக்கும் ஆயுதங்கள்.

இது ஒரு கருமான் உலைக்களம். கருமான் நமக்கு இரும்புச் சாமான்களைச் செய்து கொடுப்பான். இவன் காய்ச்சின இரும்பைப் பட்டறையின்மேல் வைத்துச் சம்மட்டியால் அடிக்கிறான். இவன் கொழு, கோடரி, கரண்டி, இரும்புச் சட்டி முதலியவற்றைச் செய்வான்.





இவன் ஒரு குயவன். இவன் சட்டி, பானை, மண் கூஜா, தாழி, அகல் முதலியவற்றை நமக்குச் செய்து கொடுப்பான். இவனுடைய ஆயுதங்கள் திருகு சக்கரம், சுழற்றுதடி, தட்டுப்பலகை முதலியன.

ஆற்றுத் தண்ணீரில் ஒருவன் துணி தப்புகிறான், பார். அவன் வண்ணான். மற்றொருவன் அழுக்குத் துணி மூட்டையை எடுத்துக்கொண்டு போகிறான். வண்ணான் நாள்தோறும் அழுக்கு உடைகளை வெளுத்துக் கொடுப்பான்.



பொன், வெள்ளி முதலியவற்றை உருக்கி நகைகள் செய்பவன் தட்டான். இவன் கம்மல், சங்கிலி, கொலுசு, மோதிரம் முதலிய பொன் நகைகளும், தட்டு, கிண்ணம், பன்னீர்ச் செம்பு முதலிய வெள்ளிப் பாத்திரங்களும் செய்வான்.

கேள்விகள்

1. யாரைத் தொழிலாளிகள் என்று சொல்லலாம்?
2. உனக்குத் தெரிந்த தொழிலாளிகள் எவர்?
3. தச்சனிடம் இருக்கும் கருவிகள் யாவை?

4. குயவன் எக்கருவியால் பானை செய்கிறான் ?

5. கீழ்க்கண்ட கருவிகளை எங்கெங்கே பார்க்கலாம் ?

உளி, துருத்தி, திருகு சக்கரம், கலப்பை.

பயிற்சி

குறிப்பு :—ஆசிரியர் தொழிலாளரைப் பற்றிப் பிள்ளைகளைக் கேள்வி கேட்டு, பிள்ளைகள் முழு வாக்கியத்தில் பதில் கொடுக்கக் கற்பிக்க வேண்டும்.

1. பிறகு, பின்பு — இவை ஒரே அர்த்தம் உடைய சொற்கள். (இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் சொல்லச் செய்யவும்.)

2. நாற்று நடுதல், துணி தப்புதல், தண்ணீர் காட்டுதல் — (இவை போன்ற முறையான சொற்கள் பலவும் கற்பிக்கவும்).

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை அமைக்க :

அடிக்கிறான், செய்கிறான், திருகுசக்கரமும் தட்டுப் பலகையும், தட்டான்.

(1) தச்சன் மரச் சாமான்களைச் ———.

(2) குயவனுடைய ஆயுதங்கள் ———.

(3) கொல்லன் சம்மட்டியால் இரும்பை ———.

(4) ——— வெள்ளிப் பேலா, கொலுசு இவற்றைச் செய்வான்.

படப் பயிற்சி—9

இவற்றைச் செய்பவர் யார் ? இவற்றை உபயோகிப்பவர் யார் ?



குறிப்பு :—பிள்ளைகளைக் கேள்வி கேட்டு முழு வாக்கியத்தில் பதில் வரவழைக்கவும்.



பாடம் 14

ஏன் ?

1. சும்மா இருக்கிற சிட்டுக் குருவிக்குச்
சோற்றைப் போடுவானேன் ?—அது
சொகுசாய்க் குந்திக் குந்தி நடந்தே
சுற்றி வருவானேன் ?

2. கொம்பில் இருக்கிற குருவிக் கூட்டைக்
கோலால் கலைப்பானேன் ?—அது
கொண்டையை நீட்டிக்கொண்டே கையை
கொத்த வருவானேன் ?

3. கும்மி அடிக்கிற பெண்க ளுடன் நீ
கூடிப் போவானேன் ?—அங்குக்
குதித்துக் குதித்துக் கொட்டி டாமல்
குனிந்து நிற்பானேன் ?

4. அம்மி பறக்க அடிக்கிற காற்றில்
ஆற்றுக்குப் போவானேன் ?—அது
ஆற்று மணலைக் கண்களில் தூவ
அழுது வருவானேன் ?

பாடம் 15

பாடசாலைப் பரிசோதனை



நேராக — விடுமுறை — இன்ஸ்பெக்டர் — சகோதரர்கள் — விசாரிக்கிறேன் — அன்பு — உரியது.

[இன்ஸ்பெக்டர் ஒரு பையனைக் காட்டி ஆசிரியரைக் கேள்வி கேட்கிறார்.]

இன்ஸ்பெக்டர் : இவன் பெயர் என்ன ?

ஆசிரியர் : இவன் பெயர் இராமன்.

இன்ஸ் : இவன் வயது என்ன ?

ஆசிரியர் : இவனுடைய வயது ஒன்பது.

இன்ஸ் : இராமா ! உனக்குச் சகோதரர்கள் எத்தனை பேர் ?

இராமன் : எனக்குச் சகோதரர்கள் நான்கு பேர்.

இன்ஸ் : (வகுப்பை நோக்கி) எழுந்திருங்கள் ; உட்காருங்கள் ; இப்போது நீங்கள் என்ன செய்தீர்கள் ?

பிள்ளைகள் : நாங்கள் எழுந்தோம்; பின்பு உட்கார்ந்தோம்.

இன்ஸ் : பாடசாலை விட்டதும் நீங்கள் என்ன செய்வீர்கள் ?

பிள்ளைகள் : நாங்கள் நேராக வீட்டிற்குச் செல்லுவோம்.

இன்ஸ் : நேற்று உங்களுக்கு விடுமுறை அல்லவா ? நீங்கள் நேற்று மாலை என்ன செய்தீர்கள் ?

பிள்ளைகள் : நாங்கள் நேற்று மாலையில் விளையாடினோம்.

இன்ஸ் : கிருஷ்ணு, ஏன் உன் உடை அசுத்தமாக இருக்கிறது? ஏன் நகங்களில் அழுக்கு இருக்கிறது ?

கிருஷ்ணன் : ஐயா, நான் இன்று காலையில் நீராடவில்லை; துணிகளைத் துவைக்கவும் இல்லை.

இன்ஸ் : அசுத்தம் பல நோய்களை உண்டுபண்ணும். ஆதலால், நீ நாளை முதல் சுத்தமாக இரு. கந்தா, நீ பூனை, எலி, பசு, ஆடு இவற்றின் பிள்ளைகளை எவ்வாறு அழைப்பாய் ?

கந்தன் : நான் அவற்றின் பிள்ளைகளைப் பூனைக் குட்டி, எலிக் குஞ்சு, பசுக் கன்று, ஆட்டுக் குட்டி என்று அழைப்பேன்.

இன்ஸ் : ஆசிரியர் நன்றாகவே கற்பித்திருக்கிறார். நீங்களும் நன்றாகப் படித்திருக்கிறீர்கள். நான் சென்று வருகிறேன். நான் உங்கள் எல்லோரையும் மறவேன்.

கேள்விகள்

1. உனது வயது என்ன ?
2. உனக்குச் சகோதரர்கள், சகோதரிகள் எத்தனை பேர் ?
3. நீ எப்பொழுது குளிப்பாய் ?
4. குளியாவிடில் உடல் எப்படி இருக்கும் ?

பயிற்சி

1. கீழ்க்கண்ட மிருகங்களின் பிள்ளைகளின் பெயர்களைக் கோடிட்ட இடங்களில் அமைத்துச் சொல் :—

   1. பூனைக் ———— .　　3. எலிக் ———— .
   2. ஆட்டுக் ———— .　　4. பசுக் ———— .

2. விடுமுறை, விசாரிக்கிறேன், அசுத்தம், அழுக்கு—ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. நீ இன்ஸ்பெக்டராக இருந்து, இதனை நாடகமாக நடித்துக் காட்டு.

பாடம் 16

தாவரங்கள்

வெய்யில்—தடிப்பாக—தோரணம்—கொத்துக்கொத்தாய்—ஊறு காய்—கிளையில்லாத—வாழைக்கன்று—சுற்றிலும்—இனிப்பாய்—சீப்புச் சீப்பாய்—கலியாணப் பந்தலில்—நுனியில்—மட்டை—விரிந்து—முற்றின—முற்ருத—இடையில்—குலேகுலேயாய்—கொப்பரை—முட்கள்—புடலங்காய்—நெட்டையாயும்—கறி.



இது மா மரம். இதில் பல கிளை கள் இருக்கின்றன. நாம் சாப்பிடும் பழங்களில் மாம்பழம் ஒன்று. மாம் பழம் வெய்யில் காலத்தில் கிடைக்கும். இதன் இலே தோரணம் கட்ட உதவும். மாங்காய்கள் கொத்துக் கொத்தாய்க் காய்க்கும். மாங்காய் ஊறுகாய் போட உதவும்.



இது வாழை மரம். கிளை இல்லாத மரங்களில் வாழையும் ஒன்று. வாழை யில் பல வகை உண்டு. கீழே மரத்தைச் சுற்றிலும் கன்றுகள் முளைக்கின்றன. வாழைக்கு விதை இல்லே. வாழைக் குலேயைப் பார். காய்கள் சீப்புச் சீப் பாய் இருக்கின்றன. குலேயின் நுனி யில் பூ இருக்கின்றது. வாழையின் ஒவ்வொரு பாகமும் உபயோகப்படும். வாழைப்பழம் இனிப்பாய் இருக்கும். வாழை மரங்களைக் கலியாணப் பந்தல் களில் கட்டுவார்கள்.



தென்னை மரத்துக்கும் கிளைகள் இல்லை. இதை வாழை மரத்துடன் ஒப்பிட்டுப் பார். இது உயரம் ஆனது; அது குட்டை ஆனது. மரத்தின் உச்சியில் மட்டைகள் விரிந்து இருக்கின்றன. இதில் காய்கள் குலை குலையாய் இருக்கின்றன. இதன் முற்றாத காய்க்கு இளநீர் என்பது பெயர். இளநீர் மிகவும் ருசியாய் இருக்கும். முற்றின காய்க்குக் கொப்பரை என்பது பெயர்.



இது ரோஜாச் செடி. இது, உயரமாய் வளரும் செடிகளில் ஒன்று. இதில் முட்கள் உண்டு. இதன் பூ மிகவும் அழகானது. அது அதிக வாசனை உள்ளது.

நீங்கள் புடலங் கொடியைப் பார்த்து இருப்பீர்கள். அதன் பூ வெண்மை நிறம். புடலங் காய்கள் சில வெண்மையாயும், சில பச்சையாயும், சில குட்டையாயும், சில நெட்டையாயும் இருக்கும். புடலங்காய் கறி செய்ய உதவும்.

கேள்விகள்

1. நீ தோட்டங்களில் என்ன என்ன மரங்களைப் பார்க்கிறாய்?
2. இளநீர் என்பது என்ன?
3. மாவிலை எதற்கு உதவுகிறது?
4. புடலங்காயின் நிறம் என்ன? அது எதற்கு உதவும்?
5. கடவுளைத் தொழக் கோவிலுக்குக் கொண்டுபோகும் பழம், காய் எவை? அவை எந்தெந்த மரத்திலிருந்து கிடைக்கின்றன?

குறிப்பு:—இக்கேள்விகளுக்கு முழு வாக்கியத்தில் பதில் வரவழைக்கவும்.

பயிற்சி

1. முட்கள் - கொப்பரை - விதை - கிளைகள் - ஊறுகாய்—ஒவ்வொன்றையும் கோடிட்ட இடங்களில் தக்கபடி அமை:—

    1. மாங்காய் ——— போட உதவும்.
    2. வாழைக்கு ——— இல்லை.
    3. வாழைக்கும் தென்னைக்கும் ——— இல்லை.
    4. முற்றின தேங்காய்க்கு ——— என்பது பெயர்.
    5. ரோஜாச் செடியில் ——— இருக்கின்றன.

2. நீ பார்த்த வேறு சில கொடிகள், செடிகள், மரங்கள் கூறுக.
3. வாசனை, மணம்—இவை ஒரே அர்த்தம் தரும் சொற்கள். (இவற்றை இரண்டு வாக்கியங்களில் சொல்லச் செய்க.)

படப் பயிற்சி—10



பயிற்சி

1. படத்தில் உள்ள ஒவ்வொரு பழத்தின் சுவை என்ன?
2. அதன் நிறம் என்ன?
3. ஒவ்வொன்றின் உருவம் எப்படி இருக்கிறது?
4. இவற்றுள் கொட்டையுள்ள பழங்கள் எவை?
5. நீ உனக்குத் தெரிந்த காய்களின் பெயர்களைச் சொல்.

குறிப்பு :—பிள்ளைகளை இக் கேள்விகள் கேட்டுத் தக்க பதில் சொல்லச் செய்க.

பாடம் 17

மிருகங்கள்

பிராணி — வகைகள் — மோப்பம் — அயலார் — ளொள்-ளொள் — சந்தோஷம் — குழைத்து — உருமும் — தோழன் — சாதுவான — அறிந்து — கடவுள் — பழமொழி — அடர்ந்து — பூண்டு — கம்பளம் — காட்டுப்பூனை — மீசை — கீச் - கீச்.



நாய் வீட்டில் வளரும் பிராணி. நாய்களில் பல வகை உண்டு. நாயின் கால்கள் நீளம். சோறு, மாமிசம் இவையே நாயின் உணவு. நாய் நன்றாக வாசனை அறியும். நாய் வாசனை அறிவது, 'நாய் மோப்பம் பிடிக்கிறது' என்று சொல்லப்படும். நாய் அயலாரைக் கண்டால் 'ளொள்-ளொள்' என்று குரைக்கும். சந்தோஷம் வந்தால் வாலைக் குழைத்து ஆட்டும். கோபம் வந்தால் உருமும். நாய் நமக்கு நல்ல தோழன்.



ஆடு ஒரு சாதுவான பிராணி. ஆடுகளிலும் பல வகை உண்டு. ஆட்டிற்கு வால் குட்டை. ஆட்டின் உடம்பில் மயிர் அடர்ந்து இருக்கும். ஆடு புல், பூண்டு, தழைகளைத் தின்னும். ஆடும் பசுவைப் போலப் பால் கொடுக்கும் மிருகம் ஆகும். அதன் மயிர் கம்பளம் நெய்யப் பயன்படுகிறது.



இது ஒரு பூனை. பூனை வீடுகளில் வசிக்கும். காடுகளில் வசிக்கும் பூனைக்குக் காட்டுப் பூனை என்பது பெயர். பூனைக்கு மீசை உண்டு. பூனைக்கு இரவில் நன்றாய்க் கண் தெரியும். சோறு, பால், மாமிசம் இவையே பூனையின் ஆகாரம். அது எலியைப் பிடித்துத் தின்னும்.

கேள்விகள்

1. நாயின் உணவுப் பொருள்கள் யாவை?
2. நாய் வாசனை அறிவதை என்ன என்று சொல்வது?
3. ஆட்டு மயிரால் என்ன செய்யப்படுகிறது?
4. பூனையால் நமக்கு என்ன உபயோகம்?

பயிற்சி

I. கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கோடிட்ட இடங்களில் சரியாய் அமைத்து எழுது :—

மோப்பம்	உருமும்	மீசை
குட்டை	இரவில்	வீட்டில்

1. நாய் ——— பிடிக்கிறது.
2. ஆட்டின் வால் ——— ஆனது.
3. பூனைக்கு ——— கண் நன்றாகத் தெரியும்.
4. நாய்க்குக் கோபம் வந்தால் ———.
5. பூனைக்கு ——— உண்டு.
6. நாய் ——— வளரும் பிராணி.

II. எதிர் வார்த்தைகள் :— உண்டு × இல்லை, தோழன் × விரோதி, நீளம் × குட்டை.

நீ, இவற்றைப் போன்ற வேறு இரண்டு எதிர்ப்பதங்களைக் கூறு.

பாடம் 18

கீரியும் பெண்ணும்

வளர்க்கிறள் — குலாவுகிறள் — காவல் — கொன்று — பயந்தாள் — மகிழ்ந்தாள் — கழுவினள் — மனம் குளிர.

நீ, இந்தப் பெண்பிள்ளையைப் பார். இவள் கையில் ஒரு கீரிப் பிள்ளையை வைத்திருக்கிறள். இவள் அதைக் குழந்தையைப் போல வளர்க்கிறள்; அதனேடு கொஞ்சிக் குலாவுகிறள். அதுவும் இவளோடு விளையாடுகிறது.

சில நாட்களுக்கு முன் இவள் வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது. அன்று இவள் குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டினள். கீரியும் தொட்டிலின் மேல் இருந்தது.

இவள் அன்று கீரியைக் குழந்தைக்குக் காவலாக விட்டாள்; விட்டுத் தண்ணீர் கொண்டுவரக் குளத்திற்குச் சென்றுவிட்டாள்.



அவள் சென்ற பிறகு ஒரு நல்ல பாம்பு தொட்டிலில் இறங்கிற்று. கிரி, அதனைக் கண்டது ; உடனே அதனைக் கடித்துக் கொன்று துண்டு துண்டாகப் போட்டுவிட்டது. பின்பு கிரி சந்தோஷத்தோடு அவள் வரும் வழியே ஓடி வந்தது.

அவள் கிரி வருவதைக் கண்டாள் ; அதன் வாயில் இரத்தம் இருந்ததைப் பார்த்தாள் ; கிரி, குழந்தையைக் கடித்துவிட்டதோ என்று பயந்தாள் ; அதைத் துரத்திக்கொண்டு தொட்டிலிடம் வந்தாள். குழந்தை தூங்குவதைக் கண்டு மகிழ்ந்தாள் ; கீழே பாம்பு கடிக்கப்பட்டு இறந்திருந்ததைப் பார்த்தாள் ; உடனே நடந்ததைத் தெரிந்து கொண்டாள்.

அவள் சந்தோஷத்தால் கீரிப் பிள்ளையை எடுத்தாள்; அதன் முகத்தைக் கழுவினுள்; மனம் குளிர அணைத்தாள்.

கேள்விகள்

1. பெண் பிள்ளை எதை வளர்த்தாள்? அவள் அதை எவ்வாறு வளர்த்தாள்?
2. அவள், குழந்தைக்குக் காவலாக எதை வைத்துவிட்டுப் போனுள்?
3. பாம்பு எங்கே வந்தது?
4. கீரி, குழந்தையை எவ்வாறு காத்தது?
5. தாய், நடந்ததை எப்படி உணர்ந்தாள்?

பயிற்சி

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. அவள் குழந்தையைத் தொட்டிலில் விட்டு ———— .
2. கீரி, பாம்பைக் கடித்துக் ———— .
3. அவள் கீரிப்பிள்ளையை எடுத்து ———— .

பாடம் 19

பறவைகள்

சந்து — பொந்தில் — எச்சம் — அழகான — ஆகாரம் — நன்ருய் — கொஞ்சும் — கொண்டை — உணவு — விடியல் — விரோதிகள் — அழுகிய — ஜீவிக்கும் — மாமிசம் — வேகமாய் — கனமாய் — இலேசாய் — இனம் — ஏமாந்து—பண்டங்கள்.



குருவி ஒரு சிறு பறவை. இது வீட்டுக் கூரைகளிலும், கிணற்றுச் சந்துகளிலும், மரப் பொந்துகளிலும் கூடு கட்டும். குருவி, வைக்கோல், நூல், பஞ்சு, குச்சி இவைகளால் கூடு கட்டும். இது தானியம், சிறு புழு, சிறு பூச்சி இவற்றைக் கொத்தித் தின்னும்.

கிளி ஓர் அழகான பறவை. இதன் நிறம் பச்சை. இதன் மூக்கு வளைந்திருக்கும். கிளியின் மூக்குச் சிவப்பு நிறம். இதுவும் மரப் பொந்துகளிலும் கோபுர மாடங்களிலும் வசிக்கும். சிலர் கிளியைக் கூண்டில் வைத்து வளர்க்கிருர்கள். பாலும் பழமுமே இதன் உணவு. இது மூக்கினுல் கொட்டைகளை உடைக்கும். இது அவற்றுள் இருக்கும் பருப்பைத் தின்னும். கிளியைப் பேசப் பழக்கலாம். கிளி நன்ருகப் பேசும்; நன்ருய்க் கொஞ்சும்.



கோழி, வீட்டில் வளர்க்கும் பறவைகளில் ஒன்று. ஆண் கோழியைச் சேவல் என்பார்கள். பெண் கோழிக்குப் பெட்டைக் கோழி என்பது பெயர். சேவலின் தலையில் சிவந்த கொண்டை உண்டு. கோழிக்குப் பூச்சி, புழு, தானியம், தவிடு முதலியவை உணவு ஆகும். பெட்டைக் கோழி முட்டை இடும்; குஞ்சு பொரிக்கும். சேவல் விடியற் காலத்தில் கூவும்.



காகம் கருமை நிறப் பறவை. இது மரக் கிளைகளில் கூடு கட்டி வசிக்கும். இது முள்களையும் குச்சிகளையும் கொண்டு கூடு கட்டும். காகம், அழுகிய பண்டங்களையும் தானிய மணிகளையும் தின்பண்டங்களையும் தின்று ஜீவிக்கும். இது மாமிசம் தின்பதில் அதிக ஆசை உடையது. இது அதிக தூரம் வேகமாய்ப் பறக்கும். இது ஆகாரத்தைக் கண்டால் தன் இனத்தைக் கரைந்து அழைக்கும். இது தன் உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும். இது அதிகாலையில் எழுந்திருக்கும். இது காலை, மாலை இரண்டு வேளைகளிலும் நீரில் குளிக்கும்.



பயிற்சி

1. இவை எதிர்ப்பதங்கள். இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல் :—

இலேசு × கனம்	அமாவாசை × பௌர்ணமி
தூரம் × பக்கம்	பகல் × இரவு
ஆண் × பெண்	சுத்தம் × அசுத்தம்

பகை × நட்பு

2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகள் அமை :—
   1. ——— யைப் பேசப் பழக்கலாம்.
   2. ——— கருமை நிறப் பறவை.
   3. ——— விடியற் காலத்தில் கூவும்.
3. ஆகாரம், உணவு—இவை ஒரு பொருளைத் தரும் சொற்கள். இவற்றைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்.





பாடம் 20

வீட்டுப் பறவைகள்

1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. சின்னஞ் சிறுகுருவி போல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனத்தில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

3. கொத்தித் திரியும்அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்கை—அதற்கு
இரக்கப் படவேண்டும் பாப்பா.

—பாரதியார்



பாடம் 21

வண்டிகள்



இரக்கம்—வலி—சொல்வோம்—தயை செய்து—யோசனைக்கு—வேக மாய்—செலவும்—உதவியால்—மாட்டு மந்தை—துன்பம்—மெதுவாய்.

ஷவுக்கத் அலி: இராமானுஜம், இந்தக் குதிரை வண்டியைப் பார். வண்டிக்காரன் சிறிதும் இரக்கம் இல்லாமல் குதிரையை அடிக்கிறான். ஐயோ பாவம்! அதற்கு வலி அதிகமாக இருக்கும். நாம் போய் வண்டிக்காரனிடம் இதைப்பற்றிச் சொல்வோம், வாருங்கள். (மூவரும் வண்டியை நெருங்குதல்.)

ஷவுக்கத் அலி: ஐயா, வண்டிக்காரரே, வாயில்லாத பிராணியைத் தயை செய்து அடிக்கவேண்டாம்.

வண்டிக்காரன்: குழந்தாய், உனது யோசனைக்கு வந்தனம். நான் போய் வருகிறேன் (வண்டியை வேகமாய் ஓட்டிச் செல்லுகிறுன்).

ஷவுக்கத் அலி: என் தகப்பனுர் ஒரு சைக்கிள் வண்டி வைத்திருக்கிறுர். அதற்கு மாடும் வேண்டாம், குதிரையும் வேண்டாம். மாட்டு வண்டியும், குதிரை வண்டியும் மெதுவாய்ப் போகும். ஆனுல் என் தகப்பனுர் சைகிள் வண்டியில் வேகமாய்ப் போவார்.

ஜோசப்: கிருஷ்ணன் தகப்பனுர் ஒரு மோட்டார் வண்டி வைத்திருக்கிறுர்.

இராமானுஜம்: ஆம், ஆம்; மோட்டார் வண்டி எல்லோராலும் வைத்துக்கொள்ள முடியுமா? மோட்டார் அதிக விலை உள்ளது; செலவும் அதிகம்.

கருப்பண்ணன்: நமக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன. நாம் அவற்றின் உதவியால் நடந்து போகிறோம். அதோ பார்: அவன் ஒரு நொண்டி. அவனுக்கு ஒரு கால் இல்லை. பாவம்! அவன் துன்பப்படுகிறுன். நாம் போய் அவனுக்கு உதவி செய்யலாம்.

இராமானுஜம்: அதோ . பார்: மாட்டு மந்தை நடுவில் ஒருவன் அகப்பட்டுக்கொண்டான். அவனே குருடன். அந்த நொண்டிக்குக் கண் தெரியும். ஆகையால் அவன் இடது புறமாகப் போகிறுன். நாம் போய் அந்தக் குருடனுக்கு வழி காட்டலாம்.

ஷவுக்கத் அலி : ஆம், நீங்கள் சொல்வது சரி. நமது அன்பை இவர்களிடமே காட்ட வேண்டும். இவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்வோம்.

கருப்பண்ணன் : வாருங்கள், நேரமாகிறது; நாம் வீட்டுக்குச் செல்வோம்.

கேள்விகள்

1. நாம் பிராணிகளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?
2. நாம் யார் யாருக்கு உதவி செய்ய வேண்டும்?

பயிற்சி

1. ஒரு குதிரை வண்டியைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் சொல்.
2. வழியில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?
3. நீ வழியில் யார் யாருக்கு உதவி செய்வாய் என்பதை நான்கு வாக்கியங்களில் சொல்.
4. வேகமாய்—இதற்கு எதிர்ப்பதம் கூறு.

படப் பயிற்சி—11

படம் பார்த்து ஒவ்வொரு படத்துக்கும் ஒரு வாக்கியம் சொல் :



பாடம் 22

பண்டகைகள்



ஆச்சரியம் — பஜனை — வணங்கு — ஏசு — ரம்ஸான் — மஸ்ஜித்— கிறிஸ்தவர் — கிறிஸ்துமஸ் — பண்டகை — திருவாதிரை — தெளிவான — வஸ்திரம்.

[ரஹீம்கான், இராமசாமி, டேவிட்]

ரஹீம்கான் : டேவிட்! என்ன ஆச்சரியம்! நீ இன்று அதி காலையில் எழுந்துவிட்டாயே?

டேவிட் : இன்று காலையில் எங்கள் தெருவில் பலர் சேர்ந்து பஜனை செய்துகொண்டு போனார்கள். ஒரு கூட்டத்தார், "ராம ராம ஜய, ராஜா ராம்; ராம ராம ஜய, சீதாராம்" என்று பாடிக் கொண்டு போனார்கள். மற்றொரு கூட்டத்தார், "தினமும் ஏசுவைத் தொழு" என்று சொல்லிக்கொண்டு போனார்கள். அந்த இரைச்சல் கேட்டு நான் எழுந்துவிட்டேன்; உடனே கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டேன்.

ரஹீம்கான்: ஓ, அப்படியா! இன்னும் சில நாட்களில் எங்களுக்கும் ரம்ஸான் பண்டகை வருகிறது. நாங்கள் மஸ்ஜிதுக்குப் போய்த் தொழ வேண்டும்.

டேவிட்: இப்போது எங்களுக்குக் கிறிஸ்துமஸ் பண்டகை அல்லவா? ஆதலால், நாங்கள் இப்போது மாதா கோவிலுக்குப் போய்க்கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு இது முக்கியமான பண்டகை.

இராமசாமி: இன்று எங்களுக்குத் திருவாதிரை நோன்பு. நான் ஆற்றுக்குப் போகிறேன். நான் குளித்துவிட்டு வந்து, கடவுளை வணங்குவேன்.

அப்துல்லா: சரி, வாருங்கள்: நாம் மூவரும் ஆற்றுக்குச் செல்வோம்.

கேள்விகள்

1. திருவாதிரை, ரம்ஸான், கிறிஸ்துமஸ்—இவை யார் யாருடைய பண்டகைகள்?
2. இராமசாமி, ரஹீம்கான், டேவிட்—இவர்கள் செல்லும் கோவில்கள் எவை?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தைகளை அமை :—

1. பலர் பஜனை ——— போனார்கள்.
2. ஒரு கூட்டத்தார் ——— போனார்கள்.
3. நாங்கள் கோவிலுக்குப் போய்க் ——— வணங்குவோம்.
4. முஸ்லிம்கள் ——— யில் தொழுவார்கள்.
5. இன்று எங்களுக்குத் ——— நோன்பு.

பாடம் 23

சுத்தம்

கழுவு — சிறிது — மணல் — காய்ச்சி — பழக்கிவிடு — விரைவு — கரை ஓரம் — இம்மாதிரி — ஆகவே — மொத்தம் — இருநூறு.

டேவிட் : ஆ! என்ன அசுத்தம் செய்கிறார்கள்! ஆற்றிலேயே பாத்திரங்களைக் கழுவுகிறார்களே!

அப்துல்லா : அதோ வண்ணானும் ஆற்றிலேயே அழுக்குத் துணிகளைத் துவைக்கிறான்! நாமும் குளிப்போம், வா.

இராமசாமி : இவர்கள் இருக்கும் இடத்தை விட்டுச் சிறிது மேலே போவோம், வா.

அப்துல்லா : இந்த ஓடையில் தெளிவான தண்ணீர் ஓடு கிறது. இதில் எத்தனை மீன்கள்! அவை எவ்வளவு அழகாய் இருக் கின்றன! அவை நீந்துவதைப் பார்.

இராமசாமி : நேற்றுக் காலை இங்கே வந்தேன். இந்த மீன் கள் என் காலை நன்றாய்க் கடித்து விட்டன.

அப்துல்லா : ஆற்றின் அடியில் மணல் இருக்கிறது. மண லும் மீனும் தண்ணீரைச் சுத்தம் செய்கின்றன. ஆற்று நீரைக் காய்ச்சிக் குடிப்பதே நலம்.

டேவிட் : நாம் விரைவில் குளிப்போம்.

இராமசாமி : உனக்கு நீந்தத் தெரியுமா?

டேவிட் : நன்றாய்த் தெரியும். நீரில் நீந்துவது உடம்புக்கு நல்லதாம். என் தகப்பனார் வெகு நாட்களுக்கு முன்பே என்னை நீந் தப் பழக்கி விட்டார்.

அப்துல்லா : வேறு ஒருவர் நமக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். மீன் குஞ்சுக்கு யார் கற்றுக்கொடுக்கிறார்கள்? அதோ, சிறு குஞ்சுகள் எப்படி நீந்துகின்றன, பார்.

இராமசாமி : கரை ஓரத்தில் எத்தனை மரங்கள்! தென்னந் தோப்பைப் பார் : இதில் உள்ள மரங்களை எண்ணிச் சொல்.

அப்துல்லா : இந்த வரிசையில் இருபது மரங்கள் இருக்கின் றன. இம்மாதிரி வரிசைகள் பத்து இருக்கின்றன. ஆகவே, மொத்தம் இருநூறு மரங்கள் இருக்கின்றன.

டேவிட் : குளித்தபின் பசி அதிகமாகிறது. அதோ, காப்பி ஹோட்டல் இருக்கிறது. அங்குச் சென்று ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்.

இராமசாமி: ஆம், எனக்கும் பசி அதிகமாகவே இருக்கிறது. அங்கு இட்டலி, வடை, தோசை முதலிய தின் பண்டங்கள் கிடைக்கும். ஏதாவது சிறிது சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்டால் தான் வீட்டுக்குப் போக முடியும்.

அப்துல்லா: ஹோட்டலில் எல்லாப் பண்டங்களும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். ஆகையால் அவை ஆரோக்கியத்துக்குக் கேடு விளைக்கும். அதோ பழக்கடை இருக்கிறது. அங்குப் போய் நல்ல பழங்கள் வாங்கிச் சாப்பிடலாம். பழம் உடம்புக்கு நல்லது.

டேவிட்: ஆம், அவ்வாறே செய்வோம். வாருங்கள்.

கேள்விகள்

1. எவை, தண்ணீரைச் சுத்தம் செய்யும்?
2. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுப்பவர் யார்?
3. படுக்கையை விட்டு எப்போது எழுந்திருக்க வேண்டும்?
4. அதிகாலையில் எழுந்திருக்கும் பறவைகள் யாவை?
5. கடவுளைத் தொழ அப்துல்லா எங்கே சென்றான்? டேவிட் எங்கே சென்றான்?
6. ஹோட்டலில் விற்கும் பண்டங்களை ஏன் சாப்பிடக் கூடாது?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—
    1. மீன் குஞ்சு ——— நன்றாய் நீந்தும்
    2. தென்னை மரங்கள் வரிசை ——— இருக்கின்றன.
    3. வண்ணான் ——— அழுக்குத் ———த் துவைக்கிறான்.
    4. குளித்தான் ——— அதிகமாகிறது.
    5. ஹோட்டலில் எல்லாப் பண்டங்களும் ——— வைக்கப்பட்டு இருக்கும்.
    6. பழம் உடம்புக்கு ———.
2. அழுக்கு, நீந்த, மொத்தம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் வைத்துச் சொல்.

பாடம் 24

அறிவுள்ள காகம்

1. தாகம் மிகுந்த காகமொன்று
தனியாய் அந்தக் காடெங்கும்
வேக மாகப் பறந்துசென்றே
மீண்டது நீர்கா ணுதெங்கும்.

2. வரும்போ தங்கோர் மண்சாடி
வழியில் இருக்கக் கண்டதுவே;
'நிரம்பத் தண்ணீர் எனப்பாடி
நெஞ்சில் மகிழ்ச்சி கொண்டதுவே.

3. ஆவ லாக அருகடைந்து
அதனுள் தன்அல கைநுழைத்தே
மேவும் நீர்எட் டாமல்நொந்து
மீண்டது செய்யும் வகைநினைத்தே.

4. சிறுகல் சல்லி களைமிகவே
தேடி ஒவ்வொன் ருய்எடுத்து
குறுகிச் சாடியின் உள்இடவே
குறைநீர் வழிந்தது வாய்அடுத்து.

5. கண்டே அந்தக் கருங்காகம்
களித்தே ‘ காகா ’ எனக்கூவிக்
கொண்டே தணியத் தன்தாகம்
குடித்துப் பறந்த தேதாவி.

கேள்விகள்

1. காகம், எட்டாத நீர் எட்ட என்ன செய்தது ?
2. நீ இக்காகத்தைப் பற்றி என்ன நினைக்கிருய் ?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. காகத்திற்குத் தாகம் ———— .
2. அது ஒரு மண் ———— க் கண்டது.
3. அது அதனுள் தன் ———— நுழைத்தது.
4. ஆனல் அதற்குத் ———— எட்டவில்லை.
5. அதனுல் அது ———— ச் சாடியுள் ———— .
6. உடனே ———— மேலே வந்தது.
7. காகம் ———— குடித்தது.

II. கீழே I-ல் இருப்பதற்குப் பொருத்தமான II-ல் இருப்பதை எடுத்து எழுது.

I	II
(1) மரப் பொந்து	(1) மீன்
(2) மரத்தில் கூடு	(2) கிளி
(3) தண்ணீர்	(3) பாம்பு
(4) புற்று	(4) காகம்

பாடம் 25

காகமும் பாம்பும்

அரண்மனை — முத்து மாலை — இடித்தார்கள் — சிறிக்கொண்டு — தந்திரம் — மெச்சியது — விசனத்தோடு — கூலி ஆட்கள் — புற்று.

ஒரு காட்டில் ஒரு காகம் இருந்தது. அது ஒரு மரத்தில் வசித்து வந்தது. அந்த மரத்தடியில் ஒரு பெரிய புற்று இருந்தது. அதில் ஒரு நல்ல பாம்பு வசித்து வந்தது. அது ஒவ்வொரு தடவையும் காகம் இடும் முட்டைகளை ஒன்று விடாமல் தின்று வந்தது.

காகம் ஒரு நாள் விசனத்தோடு இருந்தது. அப்போது அதனோடு சிநேகம் கொண்ட நரி அங்கு வந்தது. அது காகத்தின் வருத்தத்தைக் கண்டது; "நண்பா, நீ ஏன் விசனப்படுகிறாய்?" என்று கேட்டது. காகம் பாம்பின் கொடுமையைச் சொல்லிற்று.

உடனே நரி, "அரண்மனையிலிருந்து ஒரு முத்துமாலையைக் கொண்டு வந்து புற்றில் போடு; பிறகு நடக்கும் வேடிக்கையைப் பார்" என்று சொல்லிவிட்டுச் சென்றது.

காகம் அப்படியே செய்தது; இராணியின் முத்து மாலையை எடுத்து வந்தது; அரண்மனை வேலைக்காரர்கள் பார்க்கும்படி அதை அந்தப் புற்றில் போட்டது.

வேலைக்காரர்கள் பாம்புப் புற்றை இடித்தார்கள். பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. அவர்கள் அதை அடித்துக் கொன்றார்கள்; முத்துமாலையையும் எடுத்துச் சென்றார்கள். காகம் சந்தோஷம் அடைந்தது; நரியின் தந்திரத்தை மெச்சியது.

கேள்விகள்

1. காகத்திற்கு நண்பன் யார்?
2. காகம் ஏன் விசனமாய் இருந்தது?
3. நரி என்ன உபாயம் சொல்லிற்று?
4. பாம்பைக் கொன்றவர் யார்? அவர்கள் ஏன் அதைக் கொன்றார்கள்?
5. காகம் ஏன் சந்தோஷம் அடைந்தது?

(முழு வாக்கியத்தில் பதில் எழுதுக.)

பயிற்சி

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

1. ஒரு புற்றில் ——— இருந்தது.
2. கூலி ஆட்கள் புற்றை ——— பாம்பைக் ——— .
3. நரியின் ——— காகம் மெச்சியது.

பாடம் 26

தெனாலிராமனும் திருடரும்



கோமாளியாக — அபகரிக்க — உணர்ந்தான் — மனைவி — ஜாக்கிரதையாக — நிசப்தமாக — ஏற்றத்தின் மீது — நாளடைவில் — மகிழ்ந்தனர் — இரைத்தனர்.

தெலுங்கு நாட்டில் தெனாலி என்பது ஓர் ஊர். அதில் இராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் விஜய நகர அரசரது சபையில் கோமாளியாக இருந்தான். அரசர் அவன் செய்யும் வேடிக்கைகளில் பிரியம் கொண்டவர். தெனாலிராமன் நாளடைவில் பணக்காரன் ஆனான்.

சிலர் அவனது பொருளை அபகரிக்கத் துணிந்தனர். அவர்கள் ஓர் இரவு அவன் வீட்டுத் தோட்டத்தை அடைந்தனர்; அடைந்து, ஏதோ ‘குசு-குசு’ என்று பேசிக்கொண்டு இருந்தனர்.

தூங்கிக்கொண்டு இருந்த தெனலிராமன் திடீரென்று விழித்தான்; வந்திருந்தவர் திருடர் என்பதை உணர்ந்தான்.

அவன் உடனே தன் மனைவியை எழுப்பினான்; திருடர் வந்திருப்பதைத் தெரிவித்தான். உடனே இருவரும் ஒரு யோசனை செய்தனர். அதன்படி அவன் தன் மனைவியைப் பார்த்து உரத்த குரலில், "பெண்ணே, எங்கும் திருடர் பயம் அதிகரித்துவிட்டது. ஆதலால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம் நகை, பணம் எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி, நமது தோட்டக் கிணற்றுள் போட்டு விடுவது நல்லது. திருடர் பயம் நீங்கிய பிறகு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்றான்.

அவன் மனைவியும் உரத்த குரலில், "ஆம், ஆம்; இது நல்ல யோசனை. நமது சொத்துக் கிணற்றில் இருப்பதைத் திருடர் அறிந்து கொள்ள முடியாது அல்லவா? பாவம்! இஃது அறியாத திருடர் நமது வீட்டிற்குள் வந்தால், ஏமாந்து போவார்கள் என்பது நிச்சயம்" என்றாள்.

தெனலிராமன் பெட்டி ஒன்றை எடுத்தான்; செங்கற்களை அதனுள் அடுக்கினான்; பெட்டியைப் பூட்டினான்; "பெண்ணே, நீ இப் பெட்டியைப் பிடி. நமது சொத்து அனைத்தும் இதில் அடங்கி விட்டது. அதனால் இது கனம் அதிகமாக இருக்கிறது. நாம் இருவரும் இதைப் பிடித்துச் சென்று கிணற்றுள் போட்டு விடுவோம்" என்றான்.

இவர்கள் பேசியதைத் திருடர் கேட்டு மகிழ்ந்தனர். அச் சமயம் தெனலிராமனும் அவன் மனைவியும் ஒரு பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிச் சென்று கிணற்றில் போட்டனர்; வீட்டிற்கு வந்து இருவரும் படுத்துக்கொண்டனர்.

எங்கும் நிசப்தமாக இருந்தது. திருடர்கள் கிணற்று நீரை இறைத்துப் பெட்டியைத் தூக்க நினைத்தனர். அவர்களில் இருவர் ஏற்றத்தின்மீது ஏறிக் கொண்டனர். இருவர் நீர் மொண்டு இறைத்தனர். அவர்கள் கஷ்டப்பட்டு இறைத்துக்கொண்டே இருந்தார்கள். தண்ணீர், தோட்டம் முழுவதிற்கும் பாய்ந்துவிட்டது.

பொழுது விடியும் சமயமும் ஆய்விட்டது. அப்பொழுது தெனுலிராமன் கதவைத் திறந்து திருடரைப் பார்த்து, "நண்பர்களே, பொழுது விடியும் சமயமும் ஆய்விட்டது. தோட்டத்திற்குத் தண்ணீர் இறைத்தது போதும். கிணறு காலியாகிவிடப் போகிறது. நான் உங்கள் வேலையை மெச்சுகிறேன்" என்று வேடிக்கையாகப் பேசினுன்.

திருடர் திரும்பிப் பார்த்தனர்; உடனே ஓட்டம் எடுத்தனர்; தங்கள் முயற்சி வீணனதை எண்ணி வருந்திச் சென்றனர். பிள்ளைகளே, தெனுலிராமன் மதி நுட்பத்தைப் பார்த்தீர்களா!

கேள்விகள்

1. தெனுலிராமன் யார்?
2. அவன் திருடரை எப்படி ஏமாற்றினுன்?
3. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது?

பயிற்சி

நீ, இக் கதையைக் கோவையாகச் சொல்.

பாடம் 27

முயலும் ஆமையும்

(நாடகம்)

குறிப்பு :—[ஆசிரியர், இதனையும் இதுபோன்ற பாடங்களையும் பிள்ளைகளை நாடகமாக நடிக்கச் செய்தல் நலம்.]

I

முயல் : நண்பனே, நீ மெதுவாய்ப் போகும் இயல்பு உடையவன். நீ கடை வீதியின் ஒரு கோடியில் இருந்து மறு கோடிக்குப் போக ஒரு நாள் ஆகும் அல்லவா ? (சிரித்தல்)

ஆமை: நான் அவ்வளவு கேவலமாகப் போவது இல்லை. கூடும் வரையில் வேகமாய்ப் போவேன்.

முயல் : நம் இருவருக்கும் ஓட்டப் பந்தயம் வைத்தால் யார் ஜெயிப்பார் ?

ஆமை : ஓடித்தான் பார்க்க வேண்டும். இருந்தபடியே எப்படிச் சொல்வது ?

முயல் : ஓஹோ ! இருந்தபடியே சொல்ல முடியாதா ? நான் தான் ஜெயிப்பேன். இதில் என்ன சந்தேகம் ?

ஆமை : நம் இருவருக்கும் நடுவில் மத்தியஸ்தர் ஒருவர் இருக்க வேண்டும். அந்த இடத்திற்கு நாம் இருவரும் ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் இருந்து ஓடத் தொடங்க வேண்டும். மத்தியஸ்தரை முதலில் அடைபவரே ஜெயித்தவர் ஆவர்.

[நரி வருதல்]

முயல் : சரி, அதோ, நமது நண்பர் நரியார் வருகிறார். அவரே மத்யஸ்தராக இருப்பார்.

ஆமை: ஐயா, நரியாரே, நாங்கள் இருவரும் ஓட்டப் பந்தயம் இந்த இடத்தில் இருந்து தொடங்குவோம். நீர், அதோ, எதிரில் தோன்றும் ஆலமரத்து அடியில் இரும். உம்மிடம் எவர் முதலில் ஓடி வருவாரோ, அவரே ஓட்டத்தில் ஜெயித்தவர் ஆவார்.

நரி: சரி. இது ஒரு நல்ல பந்தய ஆட்டமே. நான் அங்குப் போய் இருப்பேன். நீங்கள் அங்கு வந்து சேருங்கள்.

[நரி போதல்]

முயல்: (பாதி தூரம் வந்த பின் ஒரு மரத்தடியில் இருந்து கொண்டு) நான் பாதி தூரம் வந்துவிட்டேன். ஆமை இன்னும் கால் தூரமும் வரவில்லை. அது இங்கு வருவதற்குள் நான் ஒரு தூக்கம் தூங்கி எழுவேன். [படுத்துத் தூங்குதல்]

ஆமை: (முயல் தூங்கும் இடத்தை அடைந்து) இவன் மிகவும் கர்வம் கொண்டவன். இவன் எனக்கு முன்னே வந்து விட்டதாக எண்ணிக்கொண்டு, கவலை இல்லாமல் தூங்குகிறான். இவன் எழுவதற்குள் நான் நரியாரை அடைவேன். [ஆமை போதல்]

முயல்: (எழுந்து உடம்பை முறித்துக்கொண்டு, கொட்டாவி விட்டுப் பிறகு தான் வந்த பக்கம் பார்த்து) என்ன! ஆமையைக் காணோம்! இன்னும் வரவில்லை. (போக வேண்டும் பக்கம் பார்த்து), அடடா, ஏமாந்து விட்டேனே! ஆமை என்னைத் தாண்டிப் போய் விட்டதே! அகம்பாவம் கொண்ட நான் தூங்கினதால் அல்லவா இந்தக் கதி ஏற்பட்டது! என்ன தப்பான காரியம் செய்து விட்டேன்! [என்று சொல்லிக்கொண்டே வேகமாய் ஓடுதல்]

[ஆலமரத்தடியில் நரியும் ஆமையும் இருத்தல்—முயல் வேகமாய்ப் போய் நிற்றல்—நரியும் ஆமையும் முயலைப் பார்த்து நகைத்தல்.]

முயல்: நான் கர்வப்பட்டதால் தோற்றுவிட்டேன்; இன்றோடு கர்வத்தை விட்டுவிட்டேன்.

பாடம் 28

நாட்டுக் கும்மி

1. பாரில் சிறந்த பழநாடு—இந்தப்
பாரத நாடென்னும் பொன்னுடு
பேரில் சிறந்த பெருநாடு—இது
பெற்ற பெருமை களப்பாடு.

2. தண்டமிழ் நாட்டோடு தக்கணமும்—இந்து
ஸ்தானமும் கொண்ட பெருநாடு
வண்டல் இடும்கங்கை காவேரி—சிந்து
மாநதி பாயும் திருநாடு.

3. பாரில் உயர்ந்த இமயமலே—இரு
பாகம் பகுத்திடும் விந்தமலே
பேரியல் வேங்கடம் என்னும்மலே—இவை
பெற்று விளங்கும் வளநாடு.

4. கல்விக் கடவுள் திருக்கோயில்—கடல்
காவல் படைத்த திருநாடு
செல்வக் கடவுள் திருக்கோயில்—பல
தேவர் விரும்பும் பெருவீடு.

5. நம்மை அளித்த வளநாடு—இது
நம்மதே என்னும் நினேவோடு
நம்மை அடைய வழிதேடு—எந்த
நாளும்மெய்ப் பக்தி மிகக்கூடு.

—வித்வான், ம. வி. இராகவன்

படப் பயிற்சி—12

ஒவ்வொரு படத்தையும் பார்த்து விஷயம் சொல்.



I. கீழ்வரும் கோடிட்ட இடங்களில் இச்சொற்களைப் பொருத்திக் கூறு :—

மெலிந்த — தண்டால் — ஓடுகிறான் — பஸ்கி — கரளா — கல்லை — தூக்குகிறான் — பார் வேலை — பைல்வான்.

1. இவன் ஒரு ———— மனிதன்.
2. இவன் ———— எடுக்கிறான்.
3. இவன் ————.
4. இவன் ———— எடுக்கிறான்.
5. இவன் ———— சுற்றுகிறான்.
6. இவன் ———— த் ————.
7. இவன் ———— செய்கிறான்.
8. இவன் ஒரு ———— ஆகிவிட்டான்.

II. இப்படச் செய்திகளை ஒரு கதையாகக் கூறு.

29. கதைப் பாடம்

படம் பார்த்துக் கதை சொல்.



பயிற்சி

I. **இக்கேள்விகளுக்குப் பதில் சொல் :—**

1. முதல் படத்தில் நீ என்ன பார்க்கிறாய்?
2. இரண்டாம் படத்தில் மாடுகள் என்ன செய்கின்றன?
3. மூன்றாம் படத்தில் மாடுகள் ஏன் தனித்தனியாக மேய்கின்றன?
4. நீ, நான்காம் படத்தில் என்ன காண்கிறாய்?
5. ஐந்தாம் படத்தில் சிங்கம் என்ன செய்கிறது?
6. ஆறாம் படத்தில் எத்தனை எருதுகள் உள்ளன? ஏன்?
7. ஏழாம் படத்தில் சிங்கம் என்ன செய்கிறது?
8. நீ, கடைசிப் படத்தில் என்ன பார்க்கிறாய்?
9. நீ, இப்படச் செய்திகளால் என்ன தெரிந்துகொண்டாய்?
10. நீ, இப்பாடத்திற்கு என்ன பெயர் கொடுப்பாய்?
11. முதல் படத்தில் சிங்கம் என்ன செய்கிறது? அதுவே எட்டாம் படத்தில் என்ன செய்கிறது? ஏன்?
12. நீ, இப்பாடத்தில் அறியும் நீதி என்ன?